# கர்த்தருக்காக எல்லாவற்றையும் இழப்பதற்குத் துணிதல் (21:1–17)

*எதிர்காலம் பற்றிக் காண முடிந்தால் எப்படியிருக்கும் என்று சில வேளைகளில் சிந்தித்தது உண்டு; ஆனால் ஆழ்ந்த சிந்தனையின்போது, அப்படிப்பட்ட ஒரு வல்லமையானது ஒரு உடைமையாய் இருப்பதைக்காட்டிலும் கடன் போல் இருப்பதுதான் அதிகமாய் இருக்கும் என்று நான் முடிவு செய்தேன். எனது வாழ்வில் ஏற்படப் போகும் ஒவ்வொரு துன்பம் பற்றியும் நான் முன்னறிந்திருந்தால் எப்படியிருக்கும்? என் நிகழ்காலத்தின் சந்தோஷங்களை இவை அழிக்கும்படி அனுமதிக்காதிருப்பது மிகவும் கடினமாயிருக்கும்.*

*பவுல் எருசலேம் நோக்கிச் சென்றபோது, தமது எதிர் காலத்தைப் பற்றி ஒரு விஷயம் மட்டும் உறுதியாய் அறிந் திருந்தார்: இந்த மூன்றாம் ஊழியப் பயணத்தின் முடிவில், அபாயங்கள் ஏற்படும்! அவர் கொரிந்துவில் இருந்து ரோமா புரிக்கு நிருபத்தை எழுதியபோது, தமது பயணத்தைப் பற்றிக் கூறி, பின்வருமாறு வேண்டுகோள் விடுவித்தார்: "யூதேயா விலிருக்கிற அவிசுவாசிகளுக்கு நான் தப்புவிக்கப்படும் படிக்கும், ... நீங்கள் தேவனை நோக்கிச் செய்யும் ஜெபங்களில், போராடுவது போல நீங்களும் என்னோடு கூடப் போராட வேண்டுமென்று ... உங்களை வேண்டிக் கொள்ளுகிறேன்" (ரோமர் 15:31, 32). மிலேத்துவில் அவர் எபேசுவின் மூப்பர் களிடத்தில் பிரியாவிடை பெற்றபொழுது,*

*இப்பொழுது நான் ஆவியிலே கட்டுண்டவனாய்*

*எருசலேமுக்குப் போகிறேன்; அங்கே எனக்கு நேரிடுங் காரியங்களை நான் அறியேன். கட்டுகளும் உபத்திரவங் களும் எனக்கு வைத்திருக்கிறதென்று பரிசுத்த ஆவியான வர் பட்டணந்தோறும் தெரிவிக்கிறதை மாத்திரம் அறிந்திருக்கிறேன் (அப். 20:22, 23) என்று கூறினார்.*

*அவர் எருசலேம் வந்து சேரும்போது பவுல் உறுதியாகவே தாம் கைது செய்யப்படப் போவதையும், கொல்லவும் படலாம் என்பதையும் அறிந்திருந்தார் (21:13). பிறகு ஏன் அவர் அங்கு சென்றார்? அவர் அங்கு செல்வது தேவனுடைய சித்தம் என்று நம்பி ஏற்றுக் கொண்டார் (19:21; 20:22) மற்றும் அவர் கர்த்தருக்காக எல்லாவற்றையும் இழப்பதற்குச் சித்தமானார்.*

*இந்தப் பாடத்தில் நாம், பவுலின் எருசலேம் பயணம் முடிவடைதல் பற்றியும், அவர் அந்த நகரத்தை நெருங்கி வர வர, கடும் மனத்தாக்குதல் வளர்ந்தது பற்றியும் காண்போம். நமது பாடவோட்டத்தில், பவுல் ஏன் கர்த்தருக்காக எல்லா வற்றையும் இழக்கத் துணிந்தார் - மற்றும் நாமும் ஏன் அது போன்ற விருப்புள்ளவர்களாய் இருக்க வேண்டும் - என்பதைக் கவனிப்போம்.*

## ***கடலின் குறுக்கே பயணம் செய்தல் (21:1-3)***

*எபேசிய மூப்பர்களிடத்தில் பவுல் கண்ணீருடன் பிரியா விடை பெற்ற நிகழ்ச்சியுடன் நமது முந்திய பாடம் முடிவடைந் தது. அதிகாரம் 21, “நாங்கள் அவர்களை விட்டுப் பிரிந்து, துறை பெயர்ந்த பின்பு” (வ. 1அ) என்று தொடங்குகின்றது. கிரேக்க வசனத்தில், “நாங்கள் அவர்களிடத்திலிருந்து எங்களையே கிழித்துக் கொண்டு வந்த பிறகு, கடல் பயணம் தொடங் கினோம்” (NIVயில் காணவும்) என்றுள்ளது.*

*பவுலின் குழுவில் இருந்த லூக்கா, பயணம் பற்றிய குறிப்புப் புத்தகத்தைப் பராமரித்தார் என்பது உறுதி. அவர், “நாங்கள் ... நேராயோடி, கோஸ்தீவையும், மறுநாளில் ரோது தீவையும் சேர்ந்து, அவ்விடம் விட்டுப் பத்தாரா பட்டணத்துக்கு வந்து” (வ. 1ஆ) என்று பதிவு செய்துள்ளார். முதல் இரண்டு நிறுத்தங்*

*கள் பற்றி லூக்கா விரிவாக எழுதியிருக்க முடியும். கோஸ் தீவு என்பது ஹிப்போக்கிரட்டீஸ் என்ற அறிஞர் பிறந்த இடமும், உலகின் மிகப் புகழ்வாய்ந்த மருத்துவப் பள்ளி இருந்த இடமும் ஆகும். ரோது தீவு என்பது ரோஜா மலர் விவசாயத்திற்கென்று அறியப்பட்டிருந்தது (அதனாலேயே அப்பெயர் பெற்றிருந்தது) மற்றும் அதன் துறைமுகத்தில் - உலகின் ஏழு அதிசயங்களில் ஒன்றாக இருந்து - கால்களை அகட்டி நின்றிருந்த 105 அடிகள் உயரமான மிகப் பெரிய வெண்கலச் சிலை யொன்றிற்காகவும் அத்தீவு அறியப்பட்டிருந்தது. இருப்பினும் லூக்கா, பயணம் பற்றிய விளம்பர வெளியீடு எதையும் எழுதிக் கொண்டிருந்த தில்லை. அவர் பவுலின் அவசரப் பயணம் மற்றும் பெந்தெ கொஸ்தே நாளுக்கு முன் எருசலேமில் இருக்க வேண்டும் என்று அவர் துரிதப்பட்டது ஆகியவை பற்றிக் கூறிக்கொண்டு இருந்தார் (20:16).*

*பவுலின் குழுவானது - ஒவ்வொரு துறைமுகத்திலும் நின்று சென்ற - கப்பலில் தொடர்ந்து பயணித்திருந்தால், எருச லேமுக்கு குறித்த காலத்தில் சென்றிருக்க வழியில்லாதிருந்தது. அவர்கள் பத்தாரா நகருக்கு வந்தபோது, பெனிக்கே தேசம் செல்லும் கப்பலைக் கண்டு ஆனந்தம் அடைந்தார்கள். பெனிக்கே தேசமானது பலஸ்தீனத்திற்கு நேர் வடக்கே மத்திய தரைக் கடலின் கிழக்குக் கோடியில் இருந்தது. பெனிக்கேயில் இருந்து எருசலேமுக்குப் பயணம் செல்வது சுலபமாய் இருந்திருக்கும். லூக்கா, "அங்கே பெனிக்கே தேசத்திற்குப் போகிற ஒரு கப்பலைக் கண்டு, அதிலே ஏறிப் போனோம்" (வ. 2) என்று கூறினார்.*

*கரையணைந்து செல்லும் அவர்களின் முந்திய மரக்கலம் போல் இன்றி, இந்தக் கப்பலானது மத்திய தரைக்கடலில் குறுக்கே பெனிக்கே தேசத்தை நோக்கி நேராகச் சென்றது.*[1] *வழியில் அவர்கள், பவுலும் பர்னபாவும் பத்து ஆண்டுகளுக்கு முன்பு தங்களின் முதல் ஊழியப் பயணத்தைத் தொடங் கியிருந்த (13:4) சீப்புரு தீவின் தென் பகுதியைக் கடந்து சென்றார்கள் (வ. 3அ). இருப்பினும் அந்தக் கலமானது "தீரு பட்டணம் சென்றடையும் வரை" (21:3ஆ) எங்கும் நில்லாது, "சரக்குகளை இறக்க" (வ. 3இ) வேண்டி அங்கு நின்றது.*

# *தீருவில் சோதிக்கப்படுதல்*
# *(21:4-6)*

*தீரு என்பது பெனிக்கே நாட்டின் முக்கிய நகரம் ஆகும், இது உலக வரலாற்றைப் படிக்கும் மாணவர்களுக்கும், வேதாகம வரலாற்றைப் படிக்கும் மாணவர்களுக்கும் நன்கு பழக்கமானதொரு பழங்காலத்து நகரமாகும். தீருவின் அரசராயிருந்த ஈராம் என்பவர் சாலமோனின் தேவாலயத் திற்காகக் கேதுரு மரங்களைக் கொடுத்திருந்தார் (1 இரா. 5:10).*[2] *இயேசு தம்முடைய பிரசங்கத்தில் தீருவைப் பற்றிக் குறிப்பிட்டார் (மத். 11:21) மற்றும் அவர் தீருவைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கு நேரில் சென்றும் இருந்தார் (மத். 15:21; மாற். 7:24).*

*பவுலினாலும் மற்றவர்களினாலும் ஏற்பட்டிருந்த உபத்திர வங்களினால் கிறிஸ்தவர்கள் எருசலேமில் இருந்து சிதறடிக்கப் பட்டபோது (அப். 8:1-4), அவர்களில் சிலர் பெனிக்கே நாடு வரை சென்றார்கள் (11:19). அநேகமாக அந்த வேளையில்தான் தீருவில் இருந்த சபை நிலைநாட்டப் பட்டிருக்கக்கூடும். பல வருடங்களுக்குப் பிறகு, பவுல் சீரியாவின் அந்தியோகியாவில் இருந்து எருசலேமுக்குச் செல்லும் வழியில் பெனிக்கே நாட்டைக் கடந்து சென்று, "புறஜாதியார் மனந்திரும்பின செய்தியை அறிவித்து, சகோதரர் எல்லாருக்கும் சந்தோஷத்தை உண்டாக்கினார்கள்" (15:3ஆ). ஒருவேளை பவுல் அந்த வேளையில் தீருவில் இருந்த சில சகோதரர்களைச் சந்தித் திருக்கலாம்.*[3]

*பவுல் சென்ற கப்பலானது மத்திய தரைக்கடலின் குறுக்கே நற்பயணம் ஒன்றை மேற்கொண்டது என்பது தெளிவு (ஜான் கிறிஸோஸ்தம் அவர்களின் கூற்றுப்படி, அப்பயணத்திற்கு ஐந்து நாட்களே ஆயிற்று). பெந்தெகொஸ்தே நாளுக்கு முன்னதாக எருசலேமுக்குச் சென்றடைய வேண்டும் என்று உறுதியாயிருப்பினும், அவருக்கு இப்பொழுது செலவிடச் சற்றுக் காலம் இருந்தது என்பது உறுதியாகும். தீருவில் சரக்குகளை இறக்குவதற்கு நாட்கள் ஆகும், ஆனாலும் அவர் கவலைப்படவில்லை. அந்த நேரத்தை அவர் அந்த நகரத்தில் இருந்த தமது சகோதரர்களுடன் தாம் கொண்டிருந்த பிணைப்பை ஆழப்படுத்திக் கொள்வதற்குப் பயன்படுத்தினார்.*

லூக்கா, "அவ்விடத்திலுள்ள சீஷரைக் கண்டு பிடித்து, அங்கே ஏழு நாள் தங்கினோம்" (21:4அ) என்று எழுதினார்.

இதற்கு முன்பு பவுல், புறஜாதியாரின் மத்தியில் சுவிசேஷ அறிவிப்பின் வெற்றி பற்றிய விபரங்களால் அப்பகுதியில் இந்த சகோதரர்களை மெய்சிலிர்க்கச் செய்திருந்தார்; இப்பொழுது அவரால் அன்றைய நாள் வரையிலும் இருந்த தகவல்களைத் தர முடியும். அவர்களுடைய ஐக்கியத்தின் சிறப்பு நேரமானது வாரத்தின் முதல் நாளில் அவர்கள் கர்த்தருடைய பந்தியைச் சுற்றிலும் ஒன்று கூடி அமர்ந்தபோது உச்சநிலையை அடைந்தது.

அவர்கள் ஒன்றுகூடியிருந்த நேரத்தில் ஒரு கவலையானது அவர்களின் நேரத்தைப் பாழாக்கியது: ''அவர்கள் பவுலை நோக்கி: நீர் எருசலேமுக்குப் போக வேண்டாம் என்று ஆவியின் ஏவுதலினாலே சொன்னார்கள்'' (வ. 4ஆ). தீருவில் இருந்தவர்களில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட சகோதரர்கள் தீர்க்கதரிசன வரமுடையவர்களாயிருந்து, பவுலுக்குக் காத்திருந்த பயங்கரமான அபாயங்கள் பற்றி அவரிடத்தில் தொடர்ந்து எச்சரித்துக் கொண்டிருந்தார்கள் (20:23; 21:10, 11 ஆகியவற்றைக் காணவும்).

நான் பவுலாக இருந்திருந்தால், எதிர்காலத்தைப் பற்றிய சிந்தனையின்றி, சகோதரர்களுடன் எனது ஐக்கியத்தை மகிழ்வுடன் அநுபவிக்க விரும்பியிருப்பேன், ஆனால் ஆவியானவர் அவரை மறந்து போகும்படி அனுமதிக்கவில்லை. பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்ட மனிதர்கள் பவுலுக்கு ''கட்டுகளும் உபத்திரவங்களும்'' வைத்திருக்கிறதென்று "பட்டணந்தோறும்" நினைவூட்டினார்கள் (20:23). பவுல் தமது ஊழியத்தில் தொடர்ந்து செல்லும்படி செய்த தீர்மானத்திற்கு இது எவ்வளவு பெரிய சோதனையாக இருந்திருக்க வேண்டும்!

தீரு நகரில் இருந்த சகோதரர்கள் பவுலுக்கு, "நீர் எருசலேமுக்குப் போக வேண்டாம்'' என்று கூறிய அறிவுரையைக் கவனியுங்கள். குறைந்தபட்சம் இரண்டு காரணங்களினாலாவது குறிப்பிட்ட இந்தத் தடையானது பரிசுத்த ஆவியானவரிடத்தில் இருந்துதான் வந்ததா என்று நான் சந்தேகப்படுன்றேன்: (1) பவுல் எப்பொழுதுமே ஆவியானவரின் தடைகளைக் கவனித்திருந்தார் (16:6-8). ஆவியானவர் பவுலிடம் எருசலேமுக்குச் செல்ல வேண்டாம் என்று

தெளிவாகக் கூறியிருந்தால், அவர் (பவுல்) நிச்சயமாகவே அந்த அறிவுறுத்தல்களுக்கு இணங்கியிருப்பார். (2) பவுல் தாம், தெய்வீகக் கட்டளைகளின்படியே எருசலேமுக்குச் செல்வதாக கருதினார்,[4] மற்றும் ஆவியானவர் தமக்குத் தாமே முரண்பட மாட்டார். எனது யூகம் என்னவென்றால், பரிசுத்த ஆவியானவர், பவுலுக்கு எருசலேமில் காத்திருந்த துன்பங்கள் பற்றித் தீருவில் இருந்த சகோதரர்களுக்கு வெளிப்படுத்தி யிருப்பார், அவர் (பவுல்) எருசலேமுக்குச் செல்லக் கூடாது என்பது அவர்களின் முடிவாக இருந்திருக்கும். ஆவியானவரின் எச்சரிக்கையானது *தடையாக* இல்லாமல், ஒரு *தயாரிப்பாகவே* - பவுல் எருசலேமில் எதை எதிர்பார்க்க முடியும் என்று அவரைத் தயாரிப்பதாகவே - இருந்திருக்கும்.

தீரு நகரில் ஒரு வாரம் தீவிரமாய்க் கடந்து சென்றது. இதற்கு முன் பவுல் அங்கிருந்த கிறிஸ்தவர்களிடத்தில் குறுகிய கால பழக்கம் மட்டும் கொண்டிருந்தார் என்றாலும், ஏழு நாட்கள் ஐக்கியத்திற்குப் பிறகு, அவர்கள் நெருங்கிய நண்பர்களாகவே பிரிந்தார்கள். தேவனுடைய குடும்பத்தில் இது எப்பொழுதும் இவ்விதமாகவே இருந்துள்ளது. பிரிவுக் காட்சியானது மிலேத்துவில் கண்ணீர் நிறைந்த பிரியா விடையின் எச்சமாகவே இருந்தது:

> அந்த நாட்கள் நிறைவேறின பின்பு, நாங்கள் புறப்பட்டுப் போகையில், அவர்களெல்லாரும் மனைவி களோடும் பிள்ளைகளோடுங்கூடப்[5] பட்டணத்துக்குப் புறம்பே எங்களை வழி விட்டனுப்பும்படி வந்தார்கள். அப்பொழுது கடற்கரையிலே நாங்கள் முழங்காற்படி யிட்டு[6] ஜெபம் பண்ணினோம். ஒருவரிடத்திலொருவர் உத்தரவு பெற்றுக்கொண்டபின்பு, நாங்கள் கப்பல் ஏறினோம்; அவர்கள் தங்கள் வீடுகளுக்குத் திரும்பிப் போனார்கள்[7] (21:5, 6).

பவுலுக்கும் அவரது நண்பர்களுக்கும் நலவிடை கூறுவ தற்காக முழுக் குடும்பங்களும் வந்தன. கர்த்தருக்காக எல்லா வற்றையும் இழக்கத் துணிந்த ஒருவருக்குப் பிரியாவிடை கூறுகையில் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் ஆகிய அனைவரின் கண்ணீர்களும் ஒன்று கலந்தன.

# கிருபையுள்ளவர்களால் வாழ்த்தப்படுதல் (21:7)

கப்பலானது தீருவில் இருந்து தெற்கு முகமாய்ப் புறப்பட்டு, பெனிக்கியா நாட்டின் தென்கோடித் துறைமுக நகரமும், கர்மேல் மலையில் இருந்து சுமார் பத்து மைல்கள் தூரத்தில் இருந்ததுமான பித்தலோமாய் நகரை நோக்கிப் பயண மாயிற்று. ரோமக் குடியேற்ற நகரமாயிருந்த பித்தலோமாய் நகரானது பழைய ஏற்பாட்டின் காலங்களில் “அக்கோ” என்று அழைக்கப்பட்டிருந்தது (நியாயாதிபதிகள் 1:31). பின்னாட் களில் எகிப்தின் இரண்டாம் தாலமி என்பவர் அதற்கு மறு பெயரிட்டார். தீருவில் சபை நிலைநாட்டப்பட்ட காலத்தி லேயே இங்கும் நிலைநாட்டப்பட்டிருக்கக் கூடிய (11:19) ஒரு சிறு உள்ளூர் சபையொன்று அந்த நகரில் கூடி வந்தது.

லூக்கா பின்வருமாறு பதிவு செய்துள்ளார்: “நாங்கள் கப்பல் யாத்திரையை முடித்து, தீரு[8] பட்டணத்தை விட்டுப் பித்த லோமாய் பட்டணத்துக்கு வந்து, சகோதரரை வினவி, அவர் களிடத்தில் ஒரு நாள் தங்கினோம்” (வ. 7). பவுல் இருந்த கப்ப லானது பித்தலோமாயில் துறையிறங்கிய போது இந்த சகோதரர்கள் அங்கு காத்துக் கொண்டிருந்தார்கள் என்பதை லூக்காவின் மொழிநடையானது சுட்டிக்காட்டுகின்றது - மற்றும் அவர்கள் அப்பயணிகளைத் தங்களுடன் வீட்டிற்கு அழைத்துச் சென்றார்கள்.

கர்த்தருக்காக எல்லாவற்றையும் இழக்கத் துணிந்த பவுலின் விருப்பமானது 21:1-17ன் பெரிய கருத்தாக இருந்தால், ஆதி கிறிஸ்தவர்கள் ஒன்றுகூடியிருப்பதில் காட்டிய விருப்பமானது இதன் சிறிய கருத்தாகவே இருக்கின்றது. அதிகாரங்கள் 20 மற்றும் 21ஐ நான் வாசிக்கையில், ஒவ்வொரு நகரிலும் இருந்த சகோதரர்களைத் தேடுவதற்குப் பவுல் மேற்கொண்ட பெருமுயற்சி எனது மனதில் ஆழப்பதிகின்றது. அந்த சகோதரர்களின் உபசரிப்புத் தன்மையும் அவ்விதமாகவே எனது மனதில் ஆழப்பதிகின்றது. ஒன்பது அல்லது அதற்கு மேற்பட்ட சகோதரர்கள்[9] எதிர்பாராத விதமாக வந்து சேர்ந்தது என்பது ஒரு தண்டனை விதிப்பாகக் கருதப்படவில்லை என்பது உறுதி. பித்தலோமாய் நகரில் இருந்த கிறிஸ்தவர்கள், “நீங்கள் எங்களைக் கர்த்தருக்கு உண்மையானவர்கள் என்று

கருதினால், எங்கள் வீட்டுக்கு வந்து தங்குங்கள்'' என்று வலியுறுத்தியதை நான் கேட்க முடிகின்றது (16:15ஐக் காணவும்).[10]

தீரு மற்றும் பித்தலோமாய் நகரில் இருந்த சகோதரர்களை அவர்களின் கிருபையுள்ள உபசரிப்புக்காக நான் பாராட்டு கின்றேன். பவுல் பங்கேற்றிருந்த காட்டு மிராண்டித் தனமான உபத்திரவத்தின் போது (8:1-4; 11:19) இந்த சபைகள் நிலை நாட்டப்பட்டிருந்தன என்பதை நான் கவனிக்கும்போது நான் அவர்களின் கிருபைத் தன்மையை இன்னும் சிறப்பாகப் பாராட்டுகின்றேன். முன்பு உபத்திரவப்படுத்தியவர் தங்கள் வாயிற்படியில் வந்து நின்ற பொழுது, கடந்த காலத் தவறான நடத்தையானது நிகழ்கால ஐக்கியத்தின் மேல் நிழலிடுவதை அவர்கள் அனுமதிக்காதிருந்தார்கள். அவர்கள் பவுலையும் அவரது நண்பர்களையும் வரவேற்றார்கள்.

ஒரு கிறிஸ்தவர் மற்ற கிறிஸ்தவர்களுடன் ஐக்கியமாய் இருப்பதென்பது அவருக்குக் கிடைத்த ஆசீர்வாதங்களில் ஒன்று ஆகும். கிறிஸ்தவர்கள் பயணம் செய்கையில் "சகோதரர் களைத் தேடாத'' பொழுது தங்களுக்குக் கிடைக்கும் ஆசீர்வாதங்களைத் தாங்களே களவாடி விடுகின்றார்கள்!

நமது வேத பாடப் பகுதியில் பெரிய கருத்தும் சிறிய கருத்தும் ஒன்றுக்கொன்று விலக்குதல் உடையவைகளல்ல. பவுல் கர்த்தருக்கென்று எல்லாவற்றையும் இழக்கத் துணிந்த தற்கான காரணங்களில் ஒன்று, அவர் தம் சகோதரர்கள்மேல் கொண்டிருந்த அன்பேயாகும். யூதர் மற்றும் புறஜாதிக் கிறிஸ்தவர்களிடையே நிலவிய சமாதானமின்மையை அமர்த் தும் நம்பிக்கையில்தான் அவர் எருசலேமுக்குச் சென்று கொண்டிருந்தார் (ரோமர் 15:22-33). இயேசுவைப் போலவே (யோவான் 15:13ஆ) அவரும், "தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்க" சித்தமாய் இருந்தார்.

## செசரியாவில் கவலைப்படச் செய்தல் (21:8-14)

பித்தலோமாய் நகரில் ஒரு நாள் தங்கியிருந்த பிறகு, பவுலும் அவரது தோழர்களும் தெற்கு நோக்கி செசரியாவுக்குப்

*பயணப்பட்டார்கள் (வ. 8அ) இந்த நகரானது பலஸ்தீனத்தின் முக்கிய கடல் துறைமுகமாய் இருந்தது,[11] இங்குதான் பேதுரு புறஜாதியாருக்கு முதன்முதலாக சுவிசேஷத்தைப் பிரசங்கித் தார் (அதிகாரங்கள் 10 மற்றும் 11).[12] பின்னாளில் இந்நகரானது பவுல் இரண்டு ஆண்டுகளாய்ச் சிறையிருப்பில் வைக்கப்பட்ட இடம் என்ற கூடுதல் மதிப்பைப் பெற்றது (23:31-35; 24:27). இருப்பினும், நாம் பார்த்துக் கொண்டிருக்கும் வரலாறு நடந்த காலத்தில் பவுல் எருசலேமுக்குச் செல்லும் முன் கடைசியாகத் தங்கிய இடம் என்ற பெயரை மட்டுமே இது பெற்றிருந்தது.*

*செசரியா நகரமானது எருசலேமில் இருந்து அறுபது மைல்களுக்குச் சற்று அதிகமான தூரத்தில், இரண்டு நாட்கள் பயண தூரத்தில் இருந்தது. எருசலேமில் பெந்தெகொஸ்தே பண்டிகை நாள் வரும்வரையிலும் பவுல் இந்த நகரில் (செசரியா வில்) சில நாட்கள் தங்கியிருந்தார் (21:10[13]). அவரது பயணங் களில் மிகவும் குறிப்பிடத் தக்கவராய் இருந்த ஒருவர் அவரை அங்கு உபசரித்திருந்தார். "நாங்கள் ... செசரியா பட்டணத்துக்கு வந்து, ஏழு பேரில் ஒருவனாகிய பிலிப்பென்னும் சுவிசேஷகனு டைய வீட்டிலே பிரவேசித்து, அவனிடத்தில் தங்கினோம்" (வ. 8ஆ).*

*''பிலிப்பென்னும் சுவிசேஷகனை'', அவர் பந்தி விசாரணைக்கென்று தேர்ந்தெடுக்கப்பட்ட ஏழு பேரில் ஒருவராக நாம் முதன்முதலாக அதிகாரம் 6ல் சந்தித்தோம் (6:1-6). எருசலேமில் இருந்து கிறிஸ்தவர்கள் விரட்டப்பட்ட போது, இவர் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதற்காக வடக்கில் சமாரியாவுக்குச் சென்றார் (8:4-13). அடுத்து, இவர் தெற்கில் எத்தியோப்பிய மந்திரி ஒருவருக்குப் பிரசங்கிக்கச் சென்றார் (8:26-39). பின்பு இவர், பலஸ்தீனியக் கடற்கரையோரமாகவே வடக்கு நோக்கிச் சென்று, "செசரியாவுக்கு வருகிற வரையில் சகல பட்டணங்களிலும் சுவிசேஷத்தைப் பிரசங்கித்துக் கொண்டு வந்தான்" (8:40ஆ). இவர் செசரியாவில் தமக்கு வீட்டை ஏற்படுத்திக் கொண்டு, தம் குடும்பத்துடன் அங்கேயே வாழ்ந்து வந்தார் என்பது உறுதி.[14]*

*பிலிப்பு ''சுவிசேஷகன்''[15] என்று அழைக்கப்பட்டார், ஏனென்றால் இதுவே அவரது முக்கிய முயற்சியாக இருந்தது. புதிய ஏற்பாட்டில் "சுவிசேஷகன்" என்ற வார்த்தை காணப் படும் மூன்று இடங்களில் இதுவும் ஒன்று ஆகும் (எபே. 4:13;*

*2 தீமோ. 4:5 ஆகியவற்றையும் காணவும்). "சுவிசேஷகன்" என்பது, "சுவிசேஷம்" என்பதற்கான கிரேக்க வார்த்தையின் மாற்றுருவம் ஆகும். இது "சுவிசேஷகர்" - வேறுவார்த்தைகளில் கூறுவதென்றால் "நற்செய்தியை அறிவிப்பவர்"[16] என்று சரியாக அர்த்தம் தரும். இவ்வார்த்தையின் வினைவடிவமானது 8:40ல் காணப்படுகின்றது, அங்கு பிலிப்பு, "சகல பட்டணங்களிலும் சுவிசேஷத்தைப் பிரசங்கம் பண்ணிக் கொண்டு வந்தான்."*

*பவுலை உபசரித்தவர்களில் மிகவும் குறிப்பிடத் தக்க ஒருவராகப் பிலிப்பு விளங்கினார், ஏனென்றால், பவுலின்மேல் நம்பிக்கையற்றுப் போக அல்லது வெறுப்படையத்தக்க காரணத்தைப் பெற்றவராய் ஒருவர் இருப்பாரானால் அவர் பிலிப்பே ஆவார். பிலிப்பு ஸ்தேவானுடன் ஊழியம் செய்து வந்தார் (6:5), இந்த ஸ்தேவானின் மரண தண்டனைக்குப் பவுல் கிறிஸ்தவராகுமுன் உதவி செய்திருந்தார். இவர் பவுலினால் எருசலேமில் இருந்து துரத்தப்பட்டவர்களில் ஒருவராயிருந்தார் (8:1-5). பிலிப்பு பவுலையும் அவரது பயணத் தோழர்களையும் தமது வீட்டினுள் அழைப்பிக்கையில் மறுபடியும் நாம் கிறிஸ்தவ கிருபைத் தன்மையைப் பார்க்கின்றோம்.*

*வசனம் 9ல் லூக்கா பிலிப்பைப் பற்றிய ஆர்வமுள்ள ஒரு வரலாற்றுக் குறிப்பைச் சேர்த்தார்: "தீர்க்கதரிசனஞ்சொல்லுகிற கன்னியாஸ்திரீகளாகிய[17] நாலு குமாரத்திகள் அவனுக்கு இருந்தார்கள்." பெந்தெகொஸ்தே நாளில் பேதுரு தமது பிரசங்கத்தில், யோவேல் 2ல் இருந்து, "... நான் மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன், அப்பொழுது உங்கள் குமாரரும் குமாரத்திகளும் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள் ..." (அப். 2:17) என்ற தேவனுடைய வாக்குத்தத்தத்தை மேற்கோள் காட்டினார். "தீர்க்கதரிசனம்" சொல்லுதல் என்றால், ஏவுதலினால் தேவனுக்காகப் பேசுதல் என்பதாயிருந்தது;[18] தீர்க்கதரிசன வரமானது அப்போஸ்தலர்கள் கைகளை வைத்ததினால் ஆண்கள் மீதும் பெண்கள் மீதும் பொழியப்பட்டது (1 கொரி. 11:4, 5). பொது ஆராதனைக் கூட்டங்களில் பெண்கள் இந்த வரத்தைப் பயன்படுத்தக் கூடாதிருந்தது (1 கொரி. 14:23, 31-37) (அதாவது, அவர்கள் பிரசங்கிக்கக் கூடாதிருந்தது[19]), ஆனால் அதிகம் தனிமையான சூழ்நிலைகளில் இந்த வரமானது பயன்படுத்தக் கூடியதாக இருந்தது.*

பிலிப்புவின் மகள்களைப் பற்றிய இந்த விபரத்தை லூக்கா ஏன் குறிப்பிட்டார்? தீர்க்கதரிசினிகளாய் இருந்த இந்த நான்கு பெண்களும், எருசலேமில் பவுலுக்குக் காத்திருந்த துன்பங்களைப் பற்றி உறுதிப்படுத்தினார்கள் என்று சிலர் யூகிக்கின்றனர். ஆதிக் கிறிஸ்தவ எழுத்துக்களின்படி, இம்மகள்களில் சிலர் சபையில் நன்கு அறியப்பட்டவர்களாகிய, சபையின் ஆதி வரலாறு பற்றித் தகவல் தரும் ஆதார மூலங்களாயிருந்தனர் என்று மற்றவர்கள் குறிப்பிடுகின்றார்கள். கிறிஸ்து மற்றும் சபை பற்றிய லூக்காவின் இருதொகுதி நூல்களுக்கு இவர்கள் அடிப்படைத் தகவல் மூலங்களாய் இருந்தார்கள் என்றும் அவர்கள் யூகிக்கின்றனர் (லூக். 1:3ஐக் காணவும்).[20]

பிலிப்புவின் வீட்டிலே பவுல் தங்கியிருக்கையில், என்ன காத்திருந்தது என்பது பற்றிய நினைவூட்டுதலினால் சமாதானமானது மீண்டும் ஒருமுறை சிதைக்கப்பட்டது. இந்த அறிவிப்பானது மற்ற எல்லா அறிவிப்பைக் காட்டிலும் அதிகம் காட்சியமைப்புடையதாக இருந்தது. "நாங்கள் அநேகநாள் அங்கே தங்கியிருக்கையில், அகபு என்னும் பேர் கொண்ட ஒரு தீர்க்கதரிசி யூதேயாவிலிருந்து வந்தான்" (21:10). "அகபு" என்பது ஒரு பொதுவான பெயராக இருந்ததில்லை, எனவே எருசலேமிலிருந்து வந்து "உலகமெங்கும் கொடிய பஞ்சம் உண்டாகும்" (11:28ஆ) என்று கூறிய அதே தீர்க்கதரிசியாகவே இவர் இருக்கலாம். இந்த வேளையில் அவர் உலகளாவிய அழிவை அல்ல, ஆனால் - பவுலுக்கு ஏற்படவிருந்த - தனிப்பட்ட அழிவைப் பற்றி முன்னுரைக்க வந்தார். பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசி ஒருவரைப் போல, அவர் தமது வார்த்தைகளுக்கு வரைபடக் கருத்துப் பாடத்தினால் உறுதியூட்டினார்.[21]

> அவன் எங்களிடத்தில் வந்து, பவுலினுடைய கச்சையை[22] எடுத்துத் தன் கைகளையும் கால்களையும் கட்டிக் கொண்டு: இந்தக் கச்சையுடையவனை எருசலேமிலுள்ள யூதர் இவ்விதமாய்க் கட்டிப் புறஜாதியார் கைகளில் ஒப்புக் கொடுப்பார்கள் என்று பரிசுத்த ஆவியானவர் சொல்லுகிறார் என்றான் (21:11).

தொடர்ந்து வரப்போகும் பாடத்தில், இந்தத் தீர்க்க

*தரிசனத்தின் நிறைவேற்றத்தை நாம் காண்போம். புறஜாதி யாரின் கையில் ஒப்புவிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் யூதர்கள் பவுலைக் கட்டுவிக்கவில்லை. அவர்கள், தாங்களே அவரைக் கொலை செய்ய வேண்டும் என்றுதான் விரும்பி னார்கள், ஆனால் அந்தக் கும்பலில் இருந்து பவுலைப் புறஜாதி யார்களே (அதாவது ரோமாபுரிச் சேவகர்கள்) மீட்டார்கள் என்பதை நாம் காண்போம். ஆகையால் இந்த முன்னுரைத் தலின் வார்த்தைகளானவை, யூதர்கள் பவுலைக் கட்டிய செயலின் விளைவாக அவர் புறஜாதியாரின் கைகளில் ஒப்பு விக்கப்படுவார் என்று அர்த்தம் தருவதாக இருக்க வேண்டும். விஷயம் இப்படியிருக்க, லூக்கா இவ்விதமான சொல்லாக் கத்தைப் பயன்படுத்தியது ஏன்? அநேகமாக அவர், பவுலுக்கு என்ன நடக்க வேண்டியிருந்தது என்பதற்கும், இயேசு தமக்கு எருசலேமில் என்ன நடக்கும் என்று அவரே கூறிய முன்னு ரைத்தலுக்கும் (லூக். 18:32) இடையில் ஒரு இணையை எடுத்துக்காட்ட விரும்பியிருக்கலாம்.*

*அகபுவின் வருகைக்கு முன்பு, லூக்காவும், பவுலின் பயணத் தோழர்களாய் இருந்த மற்றவர்களும், அவரைப் போக வேண்டாம் என்று வற்புறுத்தியவர்களின் சார்பில் இருந்த தில்லை. இருப்பினும், எருசலேமை நெருங்க நெருங்க, அநேகமாக அவர்கள் அதிகமாய் அச்சம் கொண்டவர்களா யிருக்கலாம். எருசலேமானது அறுபது மைல்கள் தொலைவில் இருந்த நிலையில், அகபுவின் காட்சித் தோற்ற அறிவிப்பானது அவர்களை (அச்சத்தின்) கடைக் கோடிக்குத் தள்ளி விட்டது. "போக வேண்டாம்! போக வேண்டாம்!" என்று வேண்டு கோள் விடுத்துக் கூச்சலிடுவதில் லூக்காவும் மற்றவர்களும் சேர்ந்து கொண்டார்கள். "இவைகளை நாங்கள் கேட்ட பொழுது, எருசலேமுக்குப் போக வேண்டாமென்று, நாங்களும் அவ்விடத்தாரும் அவனை வேண்டிக் கொண்டோம்" (அப். 21:12) என்று லூக்கா ஒப்புக் கொண்டார். அவர்கள் பின்வருமாறு விவாதம் செய்தார்கள் என்று நான் கற்பனை செய்கின்றேன்: "எருசலேமுக்கு இரண்டு நாட்கள் பிரயாண தூரத்தில்தான் இருக்கின்றோம். நன்கொடையை நாங்கள் எடுத்துச் செல்ல முடியும். நீங்கள் உங்களை அபாயத் திற்குள்ளாக்கத் தேவையில்லை!" அவர்கள் (அகபு கூறிய) முன்னுரைத்தலை போதிய அளவு நெருங்கி கவனிக்கவில்லை.*

பரிசுத்த ஆவியானவர், ''பவுல் சென்றால், இது அவருக்கு நடக்கும்'' என்று கூறவில்லை, மாறாக ''இது தான் நடக்கப்போகின்றது" என்றே ஆவியானவர் கூறினார். போக வேண்டாம் என்று அவர்கள் பவுலை வேண்டியபோது, தேவனைப் பொய்யராக்கும்படிக்கு அவர்கள் அவரை கேட்டுக் கொண்டார்கள்.

பவுல் தாம் மிகவும் நேசித்த சகோதரர்களால் சூழப் பட்டிருந்தார், அவர்கள் ஒவ்வொருவரும் அவரைப் போகக் கூடாதென்று குரல் எழுப்பி வற்புறுத்திக் கொண்டிருந்தார்கள். அவருக்கு மிகவும் அன்பான லூக்கா, தமது கண்களில் கண்ணீருடன் வேண்டுகோள் விடுத்துக் கொண்டிருந்தார்; தீமோத்தேயு அவரைக் கெஞ்சும் விழிகளுடன் நோக்கினார். ஒரு குரல் கூட மாறுபட்டு ஒலிக்கவில்லை. இது அந்த அப்போஸ்தலரால் தாங்கக் கூடியதற்கும் மேலானதாக இருந்தது. அந்தக் கூக்குரலுக்கு மேலாகப் பவுல் கதறினார்: "நீங்கள் அழுது என் இருதயத்தை ஏன் உடைந்து போகப் பண்ணுகிறீர்கள்? எருசலேமில் நான் கர்த்தராகிய இயேசுவின் நாமத்திற்காகக் கட்டப்படுவதற்கு மாத்திரமல்ல, மரிப்பதற்கும் ஆயத்தமாயிருக்கிறேன் என்றான்" (வ. 13). "உடைந்து போக" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையானது "தூளாக நொறுக்குதல்" என்று அர்த்தப்படுகின்றது. அவர்கள் அதை நிறுத்தாமல் இருந்திருந்தால், அவர்களால் பவுலின் தீர்மானத்தை அழித்திருக்கக் கூடும்.

இது பவுல் தாம் தேவனிடத்தில் ஏற்படுத்திய உறுதிப் பாட்டில் பின்வாங்கும் நிலைமைக்கு மிக அருகில் வந்த ஒரு நிகழ்ச்சியாக இருக்கலாம் - எல்லாம் அவரது நண்பர்கள் அந்த உறுதிப்பாட்டைக் காத்துக் கொள்ள வேண்டாம் என்று கெஞ்சியதால் ஏற்பட்டது. அவர்கள் அதைக் கெட்ட நோக்கங் களுடன் செய்யவில்லை; அவர்கள் பவுலைப்பற்றி மட்டுமே கவலைப்பட்டார்கள். இருந்தாலும் பவுல், தேவனுடைய திட்டங்கள் மற்றும் நோக்கங்கள் பற்றி அதிகம் அக்கறையுள்ள வராய் இருந்தார்.

கர்த்தருக்கென்று நீங்கள் எதையாவது இழக்கத் துணிந்தால் (உங்களில் பலர் இப்படிப்பட்டவர்களாய் இருக்கின்றீர்கள்), உங்கள் நண்பர்கள் உங்களைப் பித்துப்பிடித்தவர் என்று கூறி, உங்கள் உறுதிப்பாட்டை மறு ஆய்வு செய்யும்படி கூறினால்

ஆச்சரியப்படாதீர்கள். இந்த நண்பர்களில் சிலர் பவுலுக்கு, லூக்கா மற்றும் தீமோத்தேயு எவ்வளவு நெருக்கமாய் இருந்தார்களோ அந்த அளவுக்கு உங்களிடத்தில் நெருக்கமாய் இருந்திருக்கலாம். ஆழ்ந்த அர்த்தமுள்ள நண்பர்கள் எதிராகப் பேசும் வரையிலும் பிரசங்கிக்க விருப்பம் கொண்டிருந்த இளம் மனிதர்கள் பலரை நான் அறிவேன். தங்கள் திருமண உறவுகளில் ஏற்படும் பிரச்சனைகளின் ஊடாகச் செயல்பட விரும்பிய பல ஆண்கள் மற்றும் பெண்களை நான் அறிந்திருக் கின்றேன். ஆனால் அவர்களின் தீர்மானமானது, "இப்படிப் பட்ட கௌரவக் குறைச்சல்களை இனியும் தாங்க வேண்டாம்" என்று அவர்களின் நண்பர்களிடமிருந்து "அறிவுரை" வரும்வரையில் மட்டுமே தாக்குப்பிடிக்கின்றது. மற்ற நாடுகளில் உள்ள இழந்து போகப்பட்டுள்ள மக்களுக்குப் போதிக்கச் செல்லும் பாரம் கொண்ட இருதயங்களை நான் அறிந்துள்ளேன். ஆனால் அவர்கள் நண்பர்களால் மனதை மாற்றப்படும் வரையே அந்நிலை நீடிக்கின்றது. இந்த நண்பர்களில் பலர் கெட்ட நோக்கங்களுடன் செயல்பட்ட தில்லை; அவர்கள், தாங்கள் அன்புகூர்ந்த மக்களைப் பற்றி மட்டுமே கவலைப்பட்டார்கள். கிறிஸ்தவர் ஒருவருக்கு, தம்முடைய சொந்த நலன்கள் என்பவை கர்த்தரிடத்தில் அவர் கொண்ட உறுதிப்பாட்டிற்கு உண்மையாய் இருப்பதைக் காட்டிலும் முக்கியமானவையல்ல என்பதை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை. எதையாவது இழக்கக் கூடிய சூழ்நிலையுள்ள உறுதிப்பாட்டை நீங்கள் தேவனுக்கென்று மேற்கொள்ளும் போது, உங்களை அவரது கரங்களில் ஒப்புவித்து, விளைவை அவரது பொறுப்பில் விட்டு விடுங்கள். உங்கள் நண்பர்கள் உங்களின் தீர்மானத்தைப் பலவீனப்படுத்தும்படி அனுமதித்து விடாதீர்கள்.[23]

நீங்கள் கர்த்தருக்காக எல்லாவற்றையும் இழக்கத் துணிந்து, உங்கள் நண்பர்கள் உங்கள் மனதைத் திருப்ப முடியாமல் போகும்போது, நமது வேத பாடப்பகுதியில் நடந்தது போன்ற நிகழ்ச்சியே உங்களையும் தொடரும் என்று நான் நம்புகின் றேன். அவரைச் "சம்மதிக்கப் பண்ண முடியாது" என்று லூக்காவும் மற்றவர்களும் கண்டபோது, அவர்கள் "அமர்ந் திருந்தார்கள்" (விட்டுவிட்டார்கள்) மற்றும் முதலிலேயே அவர்கள் கூறியிருக்க வேண்டியதை அப்போது கூறினார்கள்:

“கர்த்தருடைய சித்தம் ஆகக்கடவது!”[24] (வ. 14).

தேவனுடைய பிள்ளைகள் பட்டினியாய்ப் போவதையோ, வியாதிப்படுவதையோ அல்லது துன்பத்தை அனுபவிப்பதையோ ஒருபொழுதும் தேவன் விரும்புவதில்லை என்று சிலர் இன்றைய நாட்களில் போதிக்கின்றார்கள். இருப்பினும், துன்பம் காத்திருந்த வேளையிலும் பவுல் எருசலேமுக்குச் செல்வது தேவனுடைய சித்தமாய் இருந்தது. சில வேளைகளில் உயரிய ஒரு நோக்கத்திற்காகச் சொந்த நலன்களை தியாகம் செய்தாக வேண்டும். பவுல் எருசலேமுக்குச் சென்று கைது செய்யப்படுவதில் தேவன் என்ன நோக்கமுடையவராய் இருந்திருக்கக் கூடும்? நான் இரு நோக்கங்களை யோசிக்கின்றேன்:

முதலாவது, பவுல் பல நாட்களுக்கு முன்னதாக பேதுருவுக்குக் கொடுத்திருந்த ஒரு வாக்குறுதியை நிறைவேற்றுவதற்காக எருசலேம் செல்ல வேண்டியது அவசியமாய் இருந்தது. பேதுரு பவுலினிடத்தில், “ஏழைகளை நினைத்துக் கொள்ளும்படி” (இது எருசலேம் மற்றும் யூதேயாவில் இருந்த ஏழைகளை என்று அர்த்தப்படும்) கேட்டுக் கொண்டிருந்தார், பவுலும் தாம் அப்படியே செய்வதாகக் கூறியிருந்தார் (கலா. 2:10). நீண்ட காலமாகிய போதும், அவர் தம் வார்த்தையை காப்பாற்றியிருந்தார். நன்கொடையானது திருப்திகரமான முடிவுக்குக் கொண்டு வரப்படுவதற்கு தொலைக்கட்டுப்பாட்டுச் சாதனம் எதையும் பயன்படுத்துவதற்கு வழியில்லாதிருந்தது. முன்னமே யோசித்தபடி, சகோதரர்களுக்கிடையில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்காகப் பவுல் தமது உயிரையும் பணயம் வைக்கத் துணிந்தார்.

இரண்டாவதாக, இருபது ஆண்டுகளுக்கும் அதிகமான காலத்திற்கு முன்பு பவுலுக்கு ஏற்படுத்தப்பட்ட ஒரு வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுவதற்காகப் பவுல் சிறைப்படுத்தப்படுவது (“கட்டப்படுதல்”=கைது செய்யப்படுதல்) அவருக்கு அவசியமாய் இருந்தது. பவுலின் மனமாற்றத்திற்குப் பிறகு இயேசு, “... அவன் (பவுல்) புறஜாதிகளுக்கும் *ராஜாக்களுக்கும்* ... என்னுடைய நாமத்தை அறிவிக்கிறதற்காக நான் தெரிந்து கொண்ட பாத்திரமாயிருக்கிறான்’’ (அப். 9:15; அடிக்கோடிட்டவை என்னால் வலியுறுத்தப்படுகின்றன) என்று கூறியிருந்தார். பின்பு வந்த இரு பத்தாண்டுகளில், பவுல்

ஆயிரக்கணக்கான புறஜாதியாருக்குப் பிரசங்கித்திருந்தார், ஆனால் அரசர்களுக்கு அவர் பிரசங்கித்திருந்ததில்லை. இந்த வாக்குத்தத்தமானது எவ்விதம் நிறைவேற்றப்படக் கூடுமான தாயிருந்தது? பவுல் பிரசங்கிப்பதை அரசர் எவராவது வந்து கேட்பார் என்பதோ அல்லது எந்த ஒரு அரசரின் அரண்மனைக் காவது பவுலை வரும்படி அழைக்கும் அரச கட்டளையைப் பவுல் பெறலாம் என்பதோ நடக்க முடியாததாக இருந்தது. இயேசுவின் வாக்குத்தத்தம் நிறைவேறும்படியான ஏற்பாட்டைத் தேவன் எவ்விதம் செய்திருந்தார்? பவுல் கைது செய்யப்படும்படியாக அவர் அனுமதித்தார். தொடர்ந்து வரும் பாடங்களில், பவுல் - தமது உயிர் வாழ்வு பற்றிய விசாரணைக் கைதியாக இருந்தபடியே - அரச அதிகாரங்களின் முன்பாகப் பலமுறை பிரசங்கித்ததை நாம் காண்போம்! தேவனுடைய வழிகள் பெரும் வியப்பானவைகளாயிருக்கிறதல்லவா?

## எருசலேமுக்குப் பயணம் செல்லுதல் (21:15-17)

வசனம் 15ல், "அந்த நாட்களுக்குப் பின்பு [செசரியாவில் இருந்த நாட்கள் மற்றும் உணர்வுக்குவியல் நிறைந்த நாட்களுக்குப் பிறகு] நாங்கள் பிரயாண சாமான்களை ஆயத்தம் பண்ணிக் கொண்டு எருசலேமுக்குப் போனோம்" என்று லூக்கா கூறினார். "ஆயத்தம் பண்ணிக் கொண்டு" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையானது அவர்களின் பொருட்களைக் கட்டிச் சேர்த்து வைத்ததைக் குறிப்பிடுகின்றது, ஆனாலும் இது லூக்கா இன்னும் மற்றவர்கள் அனைவரும் தங்கள் மனங்களைத் தயாரித்துக் கொள்ள வேண்டியிருந்தது; வரப்போகின்றவைகளுக்கு அவர்கள் தங்களை அமைதியாகக் கீழ்ப்படுத்தினார்கள்.

செசரியாவில் இருந்த சீஷர்களில் சிலர் அவர்களுடன் இணைந்து சென்றார்கள் (வ. 16அ). ஒருவேளை, பண்டி கைக்குச் செல்ல விரும்பிய யூதர்கள் சிலர் இவர்களில் இருந் திருக்கலாம், ஆனால் பவுலையும் மற்றவர்களையும், "சீப்புரு தீவானாகிய[25] மினாசோன் என்னும் ஒரு பழைய சீஷனிடத் திலே[26] [அவர்கள்] தங்கும்படியாக" (வ. 16ஆ) செய்வதே

அவர்களின் முக்கியமான முதன்மை நோக்கமாயிருந்தது. நூறாயிரக்கணக்கான யூதர்கள் புனிதப் பயணிகளாகப் பண்டிகை நாட்களில் எருசலேமுக்கு வந்திருக்கும் வேளையில் அங்கு தங்குமிடம் ஒன்றைக் காண்பது பெரும்பாலும் சாத்தியமற்றதாயிருந்தது. எருசலேமில் மதிப்புச் சற்றுக்கூட இல்லாத மனிதர் உள்ளிட்ட ஒரு குழுவுக்கு இடம் கிடைப்ப தென்பது இன்னும் அதிகமான பிரச்சனையாய் இருந்திருக்கும் (21:20-22, 27, 28), அக்குழுவில் கூடுதலாக, இழிவாகக் கருதப்பட்ட புறஜாதியார்[27] குறைந்தபட்சம் ஏழு பேர் இருந்தார்கள். பவுலின் குழுவினர் தங்குவதற்குப் போதுமான அளவு பெரிய வீடு ஒன்றும், அவர்களைத் தங்கும்படி அழைக்குமளவுக்கு போதுமான பெரிய மனதும் மினா சோனிடம் இருந்தன. இவ்விதமாகப் பவுலும் அவருடைய நண்பர்களும் எருசலேம் வந்து சேர்ந்தார்கள் (வ. 17).

எருசலேமுக்கு இயேசுவின் கடைசிப் பயணம் மற்றும் அதே நகருக்குப் பவுலின் கடைசிப் பயணம் ஆகியவை பற்றிய லூக்காவின் விபரங்களுக்கிடையில் உள்ள ஒற்றுமைகள் பற்றிப் பல எழுத்தாளர்கள் விமர்சித்திருக்கின்றார்கள். லூக்கா 9:51ல் இயேசுவைப் பற்றி நாம், "... அவர் எடுத்துக்கொள்ளப்படும் நாட்கள் சமீபித்தபோது, அவர் எருசலேமுக்குப் போகத் தமது முகத்தைத் திருப்பி"[28] என்று வாசிக்கின்றோம். இயேசு தமக்கு எருசலேமில் காத்திருந்தது என்ன என்பதை அறிந்திருந்தார் (லூக். 18:31-33), ஆனாலும் அவர் அங்கு சென்றார் - அது தேவனுடை சித்தம் என்று அறிந்தவராய் அப்படிச் சென்றார். அது போலவே, பவுலும் "எருசலேமுக்குப் போகத் தமது முகத்தைத் திருப்பியிருந்தார்", அவர் நிறுத்தப்படாதிருந்தார்.

## முடிவுரை

தேவனுடைய சித்தத்தைச் செய்தல் என்பது எப்பொழு துமே ஓரளவுக்கு ஏதாவது அபாயத்தை ஏற்படுத்துவதாகவே இருக்கின்றது. தேவன் சுலபமான பணிகளை ஒருபொழுதும் தருவதில்லை. கிறிஸ்தவம் என்பது மயங்கி விழும் மனமுடை யவர்களுக்கானதல்ல. தேவனுக்காக மேற்கொள்ளப்படும் துணிகரச் செயல்கள் களைப்படையச் செய்யும் சாகசத் தேடுதல்காரர்களால் மேற்கொள்ளப்படும் செயற்கையான

*துணிகரச் செயல்கள் போன்றவைகளாக இருப்பதில்லை. இவைகள் துணிகரச்செயல்கள் என்றே கருதப்படுவதில்லை - ஏனென்றால் அவர் நம்மை ஒருபொழுதும் கைவிடுவதில்லை மற்றும் அவர் எப்பொழுதும் நமக்குப் பின்னாக இருந்து செயல்பட்டுக் கொண்டிருக்கின்றார்.*

> *நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கை விடுவதுமில்லை என்று அவர் சொல்லியிருக்கிறாரே அதனாலே நாம் தைரியங்கொண்டு: கர்த்தர் எனக்குச் சகாயர், நான் பயப்படேன், மனுஷன் எனக்கு என்ன செய்வான் என்று சொல்லலாமே (எபி. 13:5ஆ, 6).*

> *அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப் பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்புகூருகிறவர் களுக்குச் சகலமும் நன்மைக்கு எதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம் (ரோமர் 8:28).*

*என்று வாசிக்கின்றோம்.*

*பவுலின் வாழ்வைப் போலவே உங்கள் வாழ்வும் அச்சுறுத்தப்பட்டாலும், "... நம்முடைய கர்த்தரும் இரட்சகரு மாகிய இயேசு கிறிஸ்துவினுடைய நித்திய ராஜ்யத்துக்குட் படும் பிரவேசம் உங்களுக்குப் பரிபூரணமாய் அளிக்கப்படும்" (2 பேது. 1:11;* NIV*) என்பதால் நாம் தைரியத்துடன் மரணத்தை எதிர்கொள்ள முடியும். நீங்கள் ஒரு உண்மையுள்ள கிறிஸ்த வராய் இருந்தால், நீங்கள் இழக்க முடியாது.*

*ஒரு மனிதர் மேற்கொள்ளக்கூடிய மிக அபாயமான துணிகரச் செயல் எது என்று நீங்கள் அறிவீர்களா? அது தேவனு டைய சித்தத்திற்குக் கீழ்ப்படிய மறுப்பதேயாகும்! உங்களில் சிலர், நீங்கள் இயேசுவின் மீது கொண்டுள்ள விசுவாசத்தை அறிக்கையிட்டு, ஞானஸ்நானம் பெறும்படி தேவன் விரும்பு கின்றார் என்பதை அறிந்திருக்கின்றீர்கள் - ஆனால் பவுலின் நண்பர்கள் அவரை எருசலேமுக்குப் போகாதிருக்கும்படிப் பேசியதைப் போலவே உங்கள் நண்பர்களும் நீங்கள் தேவனு டைய சித்தத்திற்குக் கீழ்ப்படியாமல் இருக்கும்படி உங்களிடத்தில் பேசுகின்றார்கள். உங்கள் வாழ்க்கைக்கான தேவனுடைய சித்தத்திற்கு எதிராகப் பேசும்படி நீங்கள் ஒரு பொழுதும், யாரையும் அனுமதித்து விடாதீர்கள்! உங்கள்*

*அழிவற்ற ஆத்துமாவுக்கு அபாயம் ஏற்படும்படியான நிலையில் வைத்து விடாதீர்கள்! இன்றே கர்த்தருக்குக் கீழ்ப்படியுங்கள்.*

## காட்சி-உதவிக் குறிப்புகள்

*இப்பாடத்தை நீங்கள் ஒரு வகுப்பறை அமைப்பில் பயன்படுத்தினால், பின்வரும் கவன ஈர்ப்பை நீங்கள் பயன்படுத்துவதை மகிழ்வுடன் அநுபவிக்கலாம்: இடுப்புக் கச்சை* (belt) *ஒன்றை (அதிக அகலமானது மிகவும் நல்லது) வகுப்புக்குக் கொண்டு செல்லுங்கள். வகுப்பின் துவக்கத்தில் அதைக் கைகளில் உயர்த்திப்பிடித்து, "இது பல்வேறு மக்களுக்குப் பல்வேறு கருத்துக்களைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்றது. ஒரு மனிதருக்கு இது அவரின் காற்சட்டை களை இறுக்கிப் பிடிக்கும் கருவியாயிருக்கின்றது. ஒரு குழந்தைக்கு இது பெற்றோரின் தண்டனையைப் பிரதிநிதிப் படுத்துகின்றது. ஆயினும் பவுலுக்கு இது சிறையிருப்பின் அடையாளமாய் விளங்கிற்று!" என்று கூறுங்கள். பவுலின் கச்சையை அகபு பயன்படுத்தியது எப்படி என்று செயல்முறை விளக்கம் கொடுங்கள்.*

## பிரசங்கக் குறிப்புகள்

*"அப்போஸ்தலருடைய நடபடிகள் பாகம் 2" இதழில் இருந்து "நீங்கள் எதற்காக மரிப்பீர்கள்?" என்ற பாடத்தை நீங்கள் பயன்படுத்தாதிருந்தால், இந்தப் பாடமானது இப்படிப் பின் தொடர்பாக "நீங்கள் எதற்காக மரிக்கச் சித்தமுள்ளவரா யிருக்கின்றீர்கள்?" என்று தலைப்பிட்டுப் பயன்படுத்தப்பட முடியும். பல ஆண்டுகளாக, பல மக்கள் பல மாபெரும் (மற்றும் அவ்வளவு பெரியதல்லாத) காரணங்களுக்காக மரிக்கத் துணிந்திருக்கின்றார்கள். சகோதரர்களின் நடுவில் சமாதானத் தைக் கொண்டு வருவதற்காகப் பவுல் மரிக்கத் துணிந்தார். உங்கள் பிரசங்கத்தைக் கேட்பவர்களிடத்தில், "நீங்கள் எதற்காக மரிக்கச் சித்தமுள்ளவர்களாய் இருக்கின்றீர்கள்?" என்று கேளுங்கள்.*

## குறிப்புகள்

*[1]வசனம் 3ல் அவர்கள் "சீரியா நாட்டிற்குப்" பயணம் செய்ததாக லூக்கா கூறினார். பெனிக்கே தேசம் என்பது சீரியா என்ற ரோம மாகாணத்தின் ஒரு பகுதியாகும். [2]தீருவைப் பற்றிய மற்ற பழைய ஏற்பாட்டுக் குறிப்புகளுக்கு ஏசாயா 23; எசே. 26-28; ஆமோ. 1:9, 10 ஆகிய முன்னுரைத்தல்களைக் காணவும். [3]பவுலும் பர்னபாவும் உபகார உதவியை சீரியாவின் அந்தியோகியாவிலிருந்து எருசலேமுக்குக் கொண்டு சென்ற பொழுது, தீருவில் இருந்த சகோதரர்களில் சிலரைச் சந்தித்திருக்கச் சாத்தியக் கூறுண்டு (11:27-30; 12:25). [4]"அப்போஸ்தலருடைய நடபடிகள், பாகம் 4" இதழில் அப். 19:21 மற்றும் 20:22க்கான குறிப்புகளைக் காணவும். [5]சபையின் செயல்பாடுகளில் பிள்ளைகள் கலந்து கொண்ட சந்தர்ப்பப் பொருள் நடபடிகளின் புத்தகத்தில் இவ்விடத்தில்தான் முதன்முதலாகக் குறிப்பிடப்படுகின்றது. [6]"அப்போஸ்தலருடைய நடபடிகள், பாகம் 4" இதழில் 20:36க்கான குறிப்புகளைக் காணவும். [7]சிலர் இவ்விடத்தில் தனிமையின் குறிப்பைக் காணுகின்றனர் - மற்றும் மறைமுகமான முரண்பாடு ஒன்றையும் காணுகின்றனர்: "நாங்கள் கப்பலில் ஏறி" அபாயத்தை நோக்கி முன்னேறுகையில், அவர்கள் பாதுகாப்பிற்காக "தங்கள் வீடுகளுக்குத் திரும்பிப் போனார்கள்." [8]கப்பலானது பித்தலோமாய் நகர் வரை மட்டுமே சென்றது, இவ்விதமாகப் பவுலும் மற்றவர்களும் அங்கிருந்து நடைப் பயணத்தை மேற்கொண்டனர் என்று இவ்வார்த்தையமைப்பு சுட்டிக்காட்டுவதாகச் சிலர் நினைக்கின்றார்கள். [9]"அப்போஸ்தலருடைய நடபடிகள், பாகம் 4" இதழில் 20:4க்கான குறிப்புகளைக் காணவும். [10]உபசரிப்பாகக் கருதப்படுவது எது மற்றும் தண்டனை விதிப்பாகக் கருதப்படுவது எது என்பவைகள் பற்றிய கருத்துக்கள் கலாச்சாரங்கள் பலவற்றிலும் மாறுபடுகின்றவைகள் ஆதலால், மாறுபட்ட பகுதிகளுக்கு ஏற்ப இதைத் தழுவியமைத்துக் கொள்வது தேவை. கிறிஸ்தவர்கள் தங்கள் சக கிறிஸ்தவர்களைச் சலிப்படையச் செய்யக் கூடாது (நீதி. 25:17), ஆனாலும் கிறிஸ்தவர்கள் உபசரிப்புத் தன்மையுடன் இருக்க வேண்டும் (எபி. 13:2)!*

*[11]"அப்போஸ்தலருடைய நடபடிகள், பாகம் 2" இதழில் அப். 10:1க்கான குறிப்புகளைக் காணவும். [12]வேதவசனப் பகுதியில் (9:30; 18:22) குறிப்பிடப் பட்டுள்ள காலங்களுடன் கூடுதலாக, பவுல் சீரியாவின் அந்தியோகியாவிலிருந்து எருசலேம் சென்ற பயணத்தின் போதும், எருசலேமிலிருந்து மறுபடி திரும்பிச் சென்ற பயணத்தின் போதும் செசரியாவுக்குச் சென்றிருக்கலாம். [13]லூக்கா "அநேக நாட்கள்" என்று கூறினார். இது ஆறு முதல் பத்து நாட்கள் வரையில் இருக்கலாம் என்று மதிப்பிடப்படுகின்றது. [14]நான் ஒரு சிறுவனாயிருந்த போது, "சுவிசேஷகன்" என்ற வார்த்தையானது அங்குமிங்கும் பயணம் செய்து சுவிசேஷத்தைப் பிரசங்கிப் பவருக்கே பெரும்பாலும் குறிப்பிடப்பட்டது - இதற்கு முரண்பட்ட வகையில், "பிரசங்கியார்" என்பவர் ஓரிடத்தில் தங்கியிருப்பவராயிருக்கின்றார். இருபதுக்கும் மேற்பட்ட வருடங்கள் பிலிப்பு செசரியாவிலேயே குடியிருந்த பின்னரும் கூட "சுவிசேஷகன்" என்றே அறியப்பட்டார். [15]இந்த விளக்கச் சொற்றொடரை "யோவான் ஸ்நானன்"; "தோல்பதனிடுகிறவனாகிய சீமோன்" முதலியவற்றுடன் ஒப்பிட்டுப் பார்க்கவும். [16]சுவிசேஷத்தை முழு நேரமும் பிரசங்கிக்கின்றவரை "சுவிசேஷகர்" என்ற சொற்றொடரால் அழைப்பதே நான் விரும்பித் தேர்வு செய்வதாகும். என்னைப் பொறுத்தமட்டில் "பிரசங்கியார்" அல்லது "ஊழியர்" என்பதைக்காட்டிலும் இந்தச் சொற்றொடரானது மிகவும் திட்டவட்டமுள்ள தாயிருக்கின்றது. [17]அவர்கள் திருமணமாகாமல் இருந்ததில் தனிச் சிறப்பான பரிசுத்த தன்மை எதுவும் இருந்ததாக லூக்கா யோசனை தெரிவிக்கும் சுட்டிக்காட்டுதல் எதுவும் இல்லை. அவர்கள் "முதல் கன்னியா ஸ்திரீகள்" அல்ல. [18]"அப்போஸ் தலருடைய நடபடிகள், பாகம் 1" இதழின் சொற்பொருள் அகராதியில்,* "Prophet" -

*தீர்க்கதரிசி என்ற வார்த்தையின் கீழ் காணவும். [19]1 தீமோ. 2:12ஐயும் காணவும். [20]பவுல் ரோமாபுரியில் இருந்தபோது லூக்கா அவருடன் சேர்ந்து கொண்டதால் அவர் பவுலின் பலஸ்தீனியச் சிறையிருப்பின்போது பவுலுடன் நெருக்கமாய்த் தங்கியிருந்திருக்கலாம். இவ்விதமாக செசரியாவிலோ அல்லது அதற்கு அருகிலோ அவர் அதிகமான காலத்தைச் செலவிட்டிருக்கலாம்.*

*[21]பழைய ஏற்பாட்டு எடுத்துக்காட்டுகளுக்கு, 1 இரா. 11:29-31; 22:11; ஏசாயா 20:2-4; எரே. 13:1-11; 27:1-11; 28:1-17; எசே. 4; 5:1-4; சகரியா 11:7-14 இவைகளைக் காணவும். [22]KJVயில் "girdle" என்றுள்ளது. இது வெளியணியாடையை உடலுடன் இறுக்கிப் பிடிப்பதற்காகப் பயன்படுத்தப்படும் தோல் அல்லது துணியினால் ஆன கச்சை அல்லது பட்டையாகும். [23]உங்கள் நண்பர்களின், விசேஷமாகக் கிறிஸ்தவ நண்பர்களின் ஆலோசனை மற்றும் புத்திமதியை, நீங்கள் ஒருபொழுதும் கவனிக்கக் கூடாதென்று நான் கூறவில்லை (நீதி. 24:6), இதற்கு முன்பு பவுல் தமது கிறிஸ்தவ நண்பர்கள் தம்மை அபாயமான சூழ்நிலைகளில் இருந்து விலகியிருக்கும்படி கூறிய புத்திமதிகளைக் கேட்டு நடந்தார் (எடுத்துக்காட்டாக, 19:30, 31). இந்த வேளையிலோ, பவுலின் நண்பர்கள் பவுலைத் தேவனுக்குக் கீழ்ப்படியாதிருக்கும் படி கேட்டுக் கொண்டிருந்தார்கள். யாராயிருந்தாலும், நெருங்கிய நண்பரைக் கூட உங்களிடத்தில் தேவன் விரும்பும் செயல்பாட்டிற்கு எதிரிடையாகப் பேசுவதற்கு அனுமதித்து விடாதீர்கள். [24]"அப்போஸ்தலருடைய நடபடிகள், பாகம் 4" இதழில் அப். 18:21க்கான குறிப்புகளைக் காணவும். [25]சீப்புரு தீவில்தான் பவுலும் பர்னபாவும் தங்களின் முதலாவது ஊழியப் பயணத்தைத் தொடங்கியிருந்தார்கள். மினாசோன் என்பவர் பவுலையும் மற்ற புறஜாதியாரையும் தமது வீட்டில் வந்து தங்கும்படி அழைத்திருந்ததால் அவர் (மினாசோன்) ஒரு பலஸ்தீனிய யூதராயிராமல் கிரேக்க பாஷை பேசும் யூதராய் இருந்திருப்பார். [26]மினாசோனைப் பற்றி நாம் இந்த ஒரு இடத்தில் மட்டுமே படிக்கின்றோம். இவருக்கு எருசலேமில் ஒரு வீடு இருந்தது என்ற விபரத்துடன் எருசலேம் சபையின் அடிப்படை உறுப்பினர்களில் ஒருவராக இவர் இருந்திருப்பார் என்பதைச் சுட்டிக்காட்டுவதற்காக லூக்கா, "பழைய சீஷன்" என்று குறிப்பிட்டிருக்கலாம் - அல்லது லூக்காவின் இரு தொகுதி வரலாற்றுக்கு (லூக்கா 1:3) இவர் ஒரு மூல ஆதாரமாயிருந்தார் என்பதற்காக லூக்கா இதைக் குறிப்பிட்டிருக்கலாம் - அல்லது இது குறிப்பிடத் தக்க முக்கியத்துவம் எதுவுமற்ற ஒரு விபரமாக மட்டும் இருக்கலாம். [27]புறஜாதியார், பண்டிகைகளுக்கு வருவது கேள்விப்படாதது அல்ல (யோவா. 12:20); ஆலயத்தின் வெளிப்பகுதியில் இருந்த பெரிய மண்டபமானது "புறஜாதியாரின் மண்டபம்" என்றே அழைக்கப்பட்டது. இருந்த போதிலும் புறஜாதியார் ஒருவர் ''தேவனுக்குப் பயந்தவராக,'' யூதமார்க்கத்தமைந்தவராகப் போகும் வழியில் இருப்பவராகாதிருந்தால் அவர் எருசலேமில் சந்தேகத்திற்குரிய ஒரு நபராய்க் கருதப்பட்டார். [28]லூக்கா 9:53; 13:33; 18:31; 19:11, 28 ஆகியவற்றையும் காணவும்.*